بسم الله الرحمن الرحيم

**Friday Sermon** / வெள்ளிக்கிழமை குத்து.்.பா

**13 April 2018 (25 Rajab 1439 A.H)**

# Thanks-Giving to Allah & Advices (Part 1)

## இறைவனுக்கு நன்றியும் உங்களுக்கு சில அறிவுரைகளும் (பகுதி – 1)



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

கடந்த நான்கு ஐந்து வருடங்களாக உலகின் வெவ்வேறு நாடுகளில் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக நான் மேற்கொண்ட சுற்றுப்பயணங்கள் அல்லாஹ்வின் அருளால் மிக வெற்றிகரமாக அமைந்திருந்தது. அதனால்தான் என் இதயம் நன்றியுணர்வுடன் அல்லாஹ்வை புகழ் பாடிக் கொண்டிருக்கின்றது. இந்த இறையடையாளத்தில் ஆண்களுடன் பெண்களும் மிக முக்கியமான பங்காற்றியுள்ளனர். அவர்கள் தங்களின் நேரத்தை தியாகம் செய்தும், இறைவன் அவர்களுக்கு அளித்துள்ள ஞானத்தை வினியோகித்தும் இறைவழியில் அவர்கள் உதவிபுரிந்தனர். மேலும் பல்வேறு நாடுகளில் மேற்கொண்ட தவா **(Dawa)** பணிகளை அவர்கள் வேகப்படுத்திக் கொள்ளவும் செய்துள்ளனர். குறிப்பாக இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவை சார்ந்த ஏராளமான பெண்கள் இந்நூற்றாண்டின் கலீபத்துல்லஹ்வுடையவும் இறை அடையாளங்களுடையவும் உண்மையை உணர்ந்து அதை ஏற்றுக் கொண்டனர். கணவர்களுடையவும், பெற்றோர்களுடையவும், மற்றும் கடந்த கால சமுதாயங்களை சார்ந்த மக்களுடையவும் குறுகிய மனப்பான்மைகளையும் கோபங்களையும் புறக்கணித்துக் கொண்டு இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையில் அவர்கள் உறுதியுடன் நிலைகொண்டனர். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் நுழைந்த அத்தகைய பெண்களுக்காக என் இதயம் எந்நேரமும் பிரார்த்தனையில் உள்ளது. அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முழுமையாக கீழ்பணிந்தனர். அவர்கள் தங்களின் உறுதி மொழியில் உறுதியுடன் நிலைக் கொண்டனர். தங்களின் கடமைகளை நிறைவேற்றுகின்றனர். திட நம்பிக்கையுடன் செயல்படுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் பல்வேறு நாடுகளிலிருந்து ஏராளமான இ-மெயில்கள் எனக்கு கிடைத்து வருகின்றது. அல்ஹுமதுலில்லாஹ்! இந்த இறைச் செய்தியைப் பெற்ற பல பெண்களும் மிக உணர்ச்சி வசமாகவும் மற்றும் இதய நிறைவுடனும் பேசி வருகின்றனர். அல்லாஹ்வுக்கு எவ்வாறு நன்றி செலுத்த வேண்டும் என எனக்கு தெரியாது. அவன் என் மீது பொழிந்த அருட்களும் அடையாளங்களும் கொஞ்சநஞ்சமல்ல. எனக்கு ஆதரவாக எத்தனை எத்தனை அருட்களும் அடையாளங்களும் அவன் வெளிப்படுத்தியிருக்கின்றான். பாவமன்னிப்பை தேடுவதற்கு நிரந்தரமான பிரார்த்தனையில் அவர்கள் மூழ்கியிருக்கின்றனர். அவர்கள் தங்களை சுயம் சீர்திருத்திக் கொள்ள விரும்புகின்றனர். மிக சிறந்த முறையில் அவர்கள் தங்களின் வாழ்க்கைகளை மாற்றி அமைத்திட முயற்ச்சிக்கின்றனர். அப்பெண்கள் தெய்வீக நீரில் மூழ்கியுள்ளனர். அவர்கள் அல்லாஹ்விடமிருந்துள்ள அருட்களையும் அற்புதங்களையும் பெற்றுக் கொள்பவர்களாக மாறியுள்ளனர். எல்லா வகையிலும் அவர்கள்

அல்லாஹ்வின் வழியில் உதவிபுரிவதற்கு தயாராக உள்ளனர்.சிலர் மொழியாக்க வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சிலர் தப்லீக் வேலைகளில் ஏற்பட்டுள்ளனர். சிலர் தங்களின் பிள்ளைகளுக்கு இஸ்லாமின் உண்மையான போதனைகளை கற்பிக்கின்றனர். மற்று சிலர் அல்லாஹ்வின் வழியில் முன் செல்வதற்கான ஆதரவை தங்களின் கணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அளித்து வருகின்றனர். இறைவழியில் முன் செல்வதற்கான ஆதரவு குடும்பத்தாரிடமிருந்து கிடைக்காதவர்கள் அச்சுமையை அல்லாஹ்விடம் விட்டு விட வேண்டும். அந்நேரம் அசாதாரணமான நிலையில் அவர்களுக்கு அல்லாஹ் அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டுவான். இறைவழியில் முன் செல்வதற்கான தைரியம் மற்றும் பொறுமையையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கி கொள்வான். மேலும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை முன்னேற்றத்தின் பால் கொண்டு செல்வதற்கான ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் கொள்வான். உண்மை இதுவாகும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த பெண்கள் தங்கத்தைக் கொண்டு எழுதிய ஒரு நவீனமான அத்தியாயத்தைச் சேர்கின்றனர். மனித வரலாற்றில் மற்றும் ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமின் வரலாற்றில்! ஜமா அத்து சஹீஹில் இஸ்லாமின் பெண்கள் வெப்பமான நிலைமை கடந்து செல்லும் ஒரு புதிய குளிர் காற்று போன்று பரிணமித்துள்ளனர். அது மக்களுக்கு புதிய எதிர்பாரல்களை அளிக்கின்றது. ஆம் அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் (அதற்கு) ஒரு பாராட்டுச் செய்தி.

உலக வரலாற்றில் சில கால கட்டங்கள் உள்ளன. அது கவனிக்கப்படாமல் போகின்றது. ஆனால் பிறகு அந்த வரலாறு பதிவு செய்யப்படவும் பாதுகாக்கப்படவும் செய்கின்றது. அத்துடன் தேசிய ஆவணக் காப்பகத்தில் விலையுயர்ந்த புதையலைப் போன்று அது பாதுக்காக்கப்படுகின்றது.

மத சமுதாயங்கள் வரலாற்றில் தங்களின் புதிய அத்தியாயங்களைச் சேர்க்கும் போது அல்லது பழையதை புதுசுடன் இணைத்துக் கொள்ளும் போது அதை பாராட்டுவதற்கு பதிலாக வெளியிலிருப்போர்கள் மிரட்டல் விடுகின்றனர். கடந்த காலங்களில் உலகம் அவர்களைக் குறித்து எவ்வாறு சிந்தித்தது என்பதற்கு அவர்கள் பெரிய விலை எதுவும் அளிப்பதில்லை. அல்லது இதன் விளைவுகள் என்னவாகயிருக்கும் என்பதற்கும் அவர்கள் சிறுதளவிலான விலையே அளித்துக் கொள்கின்றனர். அனைத்து உண்மையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகயிருக்கின்றது. ஆகையால் பாராட்டுதலாகயிருந்தாலும் சரி, அல்லது எதிர்கால வரலாற்றாசிரியர்களின் கற்பனை கதைகளாகயிருந்தாலும் சரி, என்னவாகயிருந்தாலும் சரி அவர்களுக்கு ஒன்றுமில்லை. அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின்

அன்பையும் இரக்கத்தையும் மட்டுமே தேடிக்கொள்கின்றனர். அவர்களின் இரட்சகனும் தலைவனும் இறைவனாவான். இறுதி விதியும் அவன் கரங்களிலாகும். நாம் அவனது வேலைக்காரர்களாகயிருப்பதால் அவன் முன்னால் மட்டுமே பணிவுடன் தலை குனித்துக் கொள்ள வேண்டும். அவனிடமிருந்துள்ள வழிகளைத் தேடிக் கொள்ள வேண்டும். அதனால் நம் செயல்கள்யாவும் அவனது விருப்பத்திற்கேற்றவார் இருக்க வேண்டும். இவ்வுலகம், இவ்வுலக விவகாரம் மற்றும் இவ்வுலக சட்டத் திட்டங்கள் ஆகியவை மேலும் தொடர்ந்துக் கொண்டே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. காலப்போக்கில் நமது சமூகவிதிக்கு ஏற்ப இந்த கிரகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களும் இறைவனின் மகத்துவத்தை புகழ்ந்துக் கொண்டிருப்பார்கள். இன்ஷா அல்லாஹ்!

இறை அன்பையும் இறை அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்வதற்காக நாம் மிக கடினமாக முயர்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும். இறை அன்பின் இறை நட்பின் ஒரு சிறிய அம்சமிருந்தால் கூட நம் பௌதீகமான அனைத்து பிரச்சினைகளுக்கும் பரிகாரங்களை கண்டு கொள்வதற்கும் மறுமைக்கு தேவையானதைப் பெற்றுக் கொள்வதற்கும் முடிந்து விடும்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைச் சார்ந்த பெண்களுக்கு ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். அது மிக அவசியமாகும். மக்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதை மிக பெரிதாக காண வேண்டாம். அதன் மீது சிறு கவனம் வைத்தால் போதும். உங்களின் கணவர்கள் சகோதரர் மற்றும் சகோதரிகளிடமிருந்துள்ள எதிர் விளைவுகளைப்பற்றி நீங்கள் கவனிக்க வேண்டாம். நமது சொந்த அமைப்பின் பாராட்டுதலோ அல்லது அனுமதியோ பார்க்காமல் இறை இன்பத்தை வென்றெடுப்பதற்கு நேர்மையான எண்ணத்துடன் செயலாற்றுங்கள். இறைவனின் பார்வையில் தகுதியடைந்தவர்கள் நிச்சயமாகவும் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராக இருக்க மாட்டார். நம் இதயங்களில் அவன் மீதான அன்பும் பாசமும் ஆழமாக பற்றிக்கொள்ளும் படி அவன் நம்மை தூண்டிக் கொள்ளட்டும். மேலும் மிகுந்த மனத்தாழ்மையுடன் அவனது மகிழ்ச்சியை தேடிக் கொள்வதற்கான ஆற்றலை அவன் நமக்கு அளித்திடட்டும் ஆமீன்.

தனது பிரசங்கத்தின் போது மேலும் சில விஷயங்களைக் கூட ஹுசூர் (அலை) அவர்கள் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் இந்த இறையடையாளத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் பெருமை கொள்வதற்கான பல விஷயங்களும் உள்ளன. தினமும் இரவும் பகலும் “தீன் வேலை” செய்வதற்கு அல்லாஹ் உங்களுக்கு கட்டளை விடுக்கவில்லை. நினைவில் கொள்ளுங்கள். உங்களின் சொந்த உடல் விஷயம், குடும்ப விஷயம் ஆகியவற்றிற்கு உங்கள் மீது சில உரிமைகள் உண்டு. உங்கள் ஆரோக்கியம் மற்றும்

குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக எல்லாவற்றையும் சமநிலையில் நன்கு முன்கொண்டு செல்ல வேண்டும். பெண்கள் தங்கள் கணவர்களுடைய கடமைகளை உணர்ந்து கொள்வதுடன் இறைவழியில் அவர்களுக்கு உதவி புரிந்திடவும் வேண்டும். அதைப் போன்றே ஆண்கள் தங்களின் குடும்பத்தின் மீது கவனம் செலுத்துவதுடன் மிக நல்ல நிலையில் குடும்பத்தை பாதுகாத்திடவும் வேண்டும். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளவும் ஒருவருக்கொருவர் உதவவும் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும். நினைவில் கொள்ளுங்கள்! ஒவ்வொருவரும் ஜமா அத்தை அமைக்க உங்களின் உதவி கரங்களை நீட்டிக் கொள்ள வேண்டும். அனைத்தும் ஒரு நபரின் மீது மட்டும் விழக்கூடாது.

**இந்தியா, கேரளா மாநிலத்தில் கண்ணூரைச் சார்ந்த நமது அமீர் ஒருமுறை என்னிடம் கூறியது என் நினைவுக்கு வருகின்றது. தொலைபேசி மற்றும் கம்பியூட்டர் ஆகியவற்றின் விளைவுகளைக் குறித்து ஒரு பேருரையாற்ற அவர் என்னிடம் கூறியிருந்தார். நிச்சயமாகவும் இந்த இரண்டு வகையான நவீன தொழில் நுட்பங்களையும் இறைவழியில் மிக பெரிய அளவிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இவை அல்லாஹ்வின் செய்தியை பரப்ப உதவுகின்றது. ஆனால் பெரும்பாலும் மக்கள் இந்த தொழில் நுட்பங்களை தவறான வழியில் பயன்படுத்துகின்றனர். மேலும் மொபைல் போன்களின் (சாதாரண போன் மற்றும் ஸ்மார்ட்போன்) தொடர்சியான பயன்பாடானது உடல் நலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். அதைப்போன்றே கம்பியூட்டர் மற்றும் டெலிவிஷன் ஆகியவற்றின் முன்னால் அதிக நேரம் செலவிடுவதும் உடல் நலத்திற்கு பாதிப்பாகும். எனவே தெய்வீக செய்திகளை பரப்ப இந்த கருவிகளை பயன்படுத்தும் போது ஒருசரியான சமநிலையை கையாள வேண்டும். இந்த நவீன தொழில் நுட்பங்களை தவறாக பயன்படுத்துவதன் மூலம் உங்களின் ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதிக்கலாம். அதனால் தான் தனிப்பட்ட முறையில் நான் கடந்த காலங்களை விரும்புகின்றேன். கடந்த 30,40 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்க்கை மிகவும் அமைதியாகவும் கண்ணியமாகவும் இருந்தது. அவ்வேளையில் பேனா மற்றும் காகிதம் மூலம் நாம் நம் கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தோம். தீங்கு விளைவிக்கும் இந்த நவீன தொழில் நுட்பங்கள் அன்று இல்லாமல் இருந்தது.**

நமது சமுதாயத்தைச் சார்ந்த ஆண்கள் மற்றும் பெண்களின் கவனத்திற்கு சில முக்கியமான விஷயங்களை கொண்டுவர நான் விரும்புகின்றேன். அதற்காக நான் முதல்படியாக பெண்களை அழைக்கின்றேன். இன்றைய சூழ்நிலையில் அதிகபட்ச நன்மைகளைப் பெறுவதற்கான ஒரு பொதுவான தத்துவத்தின் அடிப்படையில் பெண்கள்

செயல்பட வேண்டும். உண்மை என்னவென்றால் அதாவது நல்லொழுக்கம் மட்டுமல்ல நமது முக்கியமான இலக்கு. இதுவொரு தொடக்க புள்ளி மட்டுமாகும். அது பயணத்தின் முடிவு வரையிலும் நீடித்து நிற்க வேண்டும். நல்லொழுக்கம் என்பது நிலையான ஒன்றல்ல. அதுவொரு துடிப்பான சுழற்சியாக செயல்ப்படுகின்றது. நிரந்தரமாக இயங்குவதால் மட்டுமே இதை பராமரிக்க முடிகின்றது. அதன் ஆன்மீக சுழற்சி ஒருமுறை நின்று விட்டால் அத்துடன் நல்லொழுக்கம் வரையறுக்கப்படுகின்றது. ஆகையால் அச்சுழற்சி தொடர்ந்து செயல்படவேண்டும். அவ்வேளையில் அநேக புதிய நல்லொழுக்கங்கள் மற்றும் சிறப்பம்சங்கள் பெருகிவிடும். நமது மார்க்கத்தில் மற்றும் சமூக அமைப்பில் ஆன்மீக முன்னேற்றத்திற்கு புதிய வழிவகையை நாம் உருவாக்க வேண்டும். நம்மிடமுள்ள தீய வழிகளைச் சரி செய்து இதயத்திற்கு சிறிய அளவிலாவது மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகின்றோர்கள் அவ்வாறு செய்ய வேண்டும். அத்தகைய நபர்களுக்கு அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான சரியான வழிமுறைகளை நாம் வழங்க வேண்டும்.

எல்லா இளம் பெண்களும், பெண்களும் பர்தா அணிந்து கொள்வது மூன்றாம் நபர்களின் விமர்ச்சன பயத்தால் ஆகக்கூடாது. சுய நல்லொழுக்க பாதுகாப்பிற்காகவே அவர்கள் பர்தா அணிந்துக் கொள்கின்றனர். ஏனெனில் அவர்கள் இஸ்லாத்தின் போதனையை மதிக்கின்றனர். பர்தா அணிவதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டவர்களாக இருக்கக் கூடாது. மாறாக இது அவர்களின் தனிப்பட்ட முறையிலான சுய தீர்மானமாகயிருக்க வேண்டும். அது அல்லாஹ்வின் மீதான அன்பு மற்றும் சமர்ப்பணம் ஆகியவற்றை கணக்கில் கொண்டு ஆகவேண்டும். இவ்வாறு நான் கூறுவதால் இறையடையாளங்களில் உட்பட்ட பெண்கள் தங்களின் தலை மற்றும் உடல்வடிவம் ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும் என்பதல்ல. அவ்வாறு ஒருபோதும் நான் கூறவில்லை. அவர்கள் மிக நல்ல முறையில் தங்களின் தலை கூந்தல் மற்றும் உடல் வடிவங்களை மறைத்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கமான ஆடைகளை அவர்கள் அணிய வேண்டும். பெண்களின் பர்தாவை குறித்து இன்று நான் கூறுவது என்னவென்றால் நீளமான ஆடை அதாவது முகத்தையும் மறைத்துக் கொள்ளும் பர்தாவை குறித்தாகும். பர்தா அணிவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டவர்கள் பர்தாவை ஒரு சிறைச்சாலையைப் போன்று காண்கின்றனர். ஆனால் அல்லாஹ்வின் கட்டளைகளை உணர்ந்துக் கொள்பவர்களும் அவற்றை சுதந்திரமாகப் பயன்படுத்துபவர்களும் (எந்தவொரு கட்டாயமும் இல்லாமல் அல்லாஹ்வின் மீதான ஆழ்ந்த நம்பிக்கையுடன் பர்தா அணிந்து கெள்ளுபவர்களும்) நிச்சயமாகவும் எப்போதும் நன்னெறி மற்றும் நற்பண்பு உடையவர்களாக திகழ்கின்றனர்.

பெண்களைப் பொறுத்தவரையில் அல்லாஹ் அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது அவர்கள் எப்பொழுதும் ஒழுக்கமாகவும், ஒழுங்காக தங்களை மறைத்துக் கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். அல்லாஹ்வின் இக்கட்டளைகளை நிறைவேற்றுவதில் எவர் ஒருவர் அதிக கவனம் செலுத்துகின்றாரோ அவர் அதிலிருந்து மிக அதிகமான நன்மைகளை பெற்றுக்கொள்கின்றார். அது இம்மையிலும் மறுமையிலும்!.

தெய்வீக சித்தத்திற்கும் நோக்கத்திற்குமாக தங்களை அடையாளம் காட்டுவதற்கு அவர்கள் சிறந்த திர்மானம் எடுத்துக் கொண்டவர்களாகயிருக்கின்றனர். நம் ஜமா அத்தைச் சார்ந்த பெண்கள் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பிற பெண்களுக்கு (தியாகங்கள் புரிவதற்கு) ஊக்குவித்தலாக இருக்கின்றனர். அது வாயிலாக அவர்கள் சமூக நலத்திட்டத்திற்கு போதுமான ஏற்பாடுகளை செய்கின்றனர். ஒருவொருக்கொருவர் நட்புடனும் ஒத்துழைப்புடனும் இருப்பதற்கான ஆன்மீக ஆற்றலை அது வழங்குகின்றது. இந்த ஒரேயொரு நற்பண்பு மூலம் அவர்களுக்கு பலவகையான நன்மைகளை பெற முடிகின்றது. காலப்போக்கில் இந்த ஆன்மீக அருட்கள் பல மடங்குகளாக இதிகரித்து விடுகின்றது. இம்மையிலும் மறுமையிலும்!.

இந்த உரையினை தற்போது நான் முடித்துக் கொள்கின்றேன். இவ்விஷயத்தில் இன்ஷா அல்லாஹ் மேலும் விளக்கமளித்துக் கொள்வதற்கு அடுத்த வாரமும் அல்லாஹ் எனக்கு வாய்ப்பு அளிப்பானாக! இந்த உரைவழியாக உங்களுக்கு அளித்த உபதேசங்களை உணர்ந்து கொள்வதற்கான அறிவும் தௌபீக்கும் வழங்கி எல்லாம்வல்ல அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும். இது உங்களின் நன்மைக்காகவே ஆகும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்!.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**

**E-M:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663